**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 416/2025 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 7 |

| | | |
|---|---|---|
| Name | : | கதிர்வேல் |
| Father's Name | : | கந்தசாமி |
| Village | : | ரெங்கநாதபுரம் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 70 |
| ACCUSED | சடையப்பன் ஆஜர். | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2026

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ரெங்கநாதபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் கேட்டுக் கொண்டதன்பேரில் எழுதப்படாத வெற்று பேப்பரில் கையெழுத்து செய்தேன். நான் எதற்காக கையெழுத்து செய்தேன் என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. )**

**குறுக்கு விசாரணை:- (அரசு தரப்பில்)**

கடந்த 04.09.2017-ஆம் ஆண்டு நானும் எனது உறவினர் நடேசன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் ரெங்கநாதபுரம் செல்லும் பொழுது

பெரம்பலூர் போலீசார் அதற்கு முன்தினம் 03.09.2017–ஆம் தேதி இரவு சுமார் 7.15 மணியளவில் பெரம்பலூர் – செட்டிக்குளம் செல்லும் சாலையில் ஆதரவற்றோர் பள்ளிஅருகில் விபத்து நடந்தது சம்மந்தமாக விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் அது சம்மந்தமாக அந்த இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ய எங்கள் இருவரையும் சாட்சிகளாக இருக்க சொல்லி கேட்டுக் கொண்டதன்பேரில் அவர்கள் தயார் செய்த பார்வை மகஜரில் நானும் நடேசன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை எனக்கு தெரியாது. எதிரி கேட்டுகொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**